

# Points to note
# Before tooth removal

# கவனிக்கவும்!

**நீங்கள் பல் நீக்கம் செய்ய வந்திருப்பின் முதலில் இதை கட்டாயமாக தெரிந்து கொள்ளவும்**

- ஆஸ்துமா, அலர்ஜி, எயிட்ஸ், ஹெப்படைட்டிஸ், இதய நோய், தைராய்டு நோய், வலிப்பு நோய், வாத நோய், சர்க்கரை வியாதி, போன்றவைகள் இருந்தால், பல் நீக்கம் செய்யப்படுவதற்கு முன் டாக்டரிடம் கட்டாயமாக தெரிவிக்க வேண்டும்.
- நீங்கள் ஏதாவது நோய்க்கு மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் அதை டாக்டரிடம் தெரிவிக்கவும். சிகிட்சை பற்றிய விவரங்கள் மற்றும் குறிப்புகள் இருந்தால் டாக்டரிடம் காட்டவும்.
- இரத்த அழுத்தம் அதிகமாகவோ, குறைவாகவோ இருந்தாலும் ஓரளவு உயர்ந்த பகுதியில் மற்றும் படிக்கட்டுகளில் ஏறும் போது இதயம் படபடப்பு அடைந்தாலோ, மூச்சு தடைபட்டாலோ டாக்டரிடம் தெரிவிக்கவும்.
- சிறு காயத்திலிருந்து கூட அதிகப்படியான இரத்தம் கசிந்தால் அவ்விவரத்தை டாக்டரிடம் தெரிவிக்கவும்.
- பல் நீக்கம் செய்வதற்கு முன் நன்றாக சாப்பிட்டு வரவும்.
- பல் நீக்கம் செய்யப்படுவதற்கு முன் ஏதாவது மருந்து உட்கொள்ள டாக்டர் பரிந்துரைத்திருந்தால் அதை சாப்பிட்டு வரவும்.
- கர்பிணியாயின் அவ்விவரத்தை டாக்டரிடம் தெரிவிக்கவும்.

WATER MARK . WATER MARK
www.smartdocposters.com
WATER MARK . WATER MARK
WATER MARK . WATERMARK
www.smartdocposters.com

YOUR CLINIC DETAILS WILL BE ADDED HERE



# பல் நீக்கம் செய்தபின் கவனிக்க வேண்டியவைகள்

**Care after Tooth removal**

பல் நீக்கம் செய்த பகுதியில் இறுக கடித்து வைத்திருக்கும் பஞ்சினை 45 -ாவது நிமிடத்தில் மெதுவாக அகற்றவும்.

பல் நீக்கம் செய்த மூன்று நாட்களுக்குள் வீக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஐஸ் கட்டியை பிளாஸ்டிக் தாளிலோ அல்லது கைக்குட்டையிலோ வைத்து பல் எடுக்கப்பட்ட பகுதியின் வெளியே கன்னத்தில் ஒத்தடம் கொடுத்தால் ரத்தக் கசிவும் வீக்கவும் தடைபடும்.

பல் நீக்கம் செய்த நாளில் கடின உழைப்பு மற்று அதிகமாக பேசுவதையும் தவிர்க்கவும்.



WATER MARK WATER MARK www.smartdocposters.com

YOUR CLINIC DETAILS WILL BE ADDED HERE



# பல் நீக்கம் செய்தபின் கவனிக்க வேண்டியவைகள்

**Care after Tooth removal**

24 மணி நேரத்திற்கு சூடானதும், கட்டியானதுமான உணவு பதார்த்தங்கள் சாப்பிடுவதை தவிர்க்கவும்





குளிர்ந்த உணவு பதார்த்தங்கள் சாப்பிடவும்

பல் நீக்கம் செய்த மறு நாள் உப்பு நீரால் (வாயினுள் தேக்கி) ஒத்தடம் கொடுக்க

WATER MARK . WATER MARK
www.smartdocposters.com
WATER MARK . WATER MARK
WATER MARK . WATER MARK
www.smartdocposters.com
WATER MARK . WATER MARK

YOUR CLINIC DETAILS WILL BE ADDED HERE



# பல் நீக்கம் செய்தபின் கவனிக்க வேண்டியவைகள்


**Care after Tooth removal**

பல் நீக்கம் செய்த நாளில் புகைபிடித்தல் வெற்றிலை மெல்லுதல் தவிர்க்கவும்.



டாக்டர் பரிந்துரைத்த மருந்துக்களை நேரம் மற்றும் அளவு மாறாமல் சாப்பிடவும்.





பல் நீக்கம் செய்த பகுதியில் தையல் போட்டிருப்பின் டாக்டர் குறிப்பிட்ட நாளில் தவறாமல் தையலை பிரிக்கவும்.

WATER MARK . WATER MARK
www.smartdocposters.com

YOUR CLINIC DETAILS WILL BE ADDED HERE



# பல் நீக்கம் செய்தபின் கவனிக்க வேண்டியவைகள்

**Care after Tooth removal**

**பல் நீக்கம் செய்த காயத்தில் உணவுத்துகள்கள் ஒட்டி சீழ் பிடித்தால் வலி ஏற்படும்.**
**இந்நிலை ஏற்பட்டால் உடனே டாக்டரிடம் காண்பிக்கவும்.**

பல் எடுக்கப்பட்ட பகுதியில் செயற்கை பல் 2 வாரத்திற்குள் வைக்க வேண்டும்

WATER MARK . WATER MARK
www.smartdocposters.com
WATER MARK . WATER MARK
www.smartdocposters.com
WATER MARK . WATER MARK

YOUR CLINIC DETAILS WILL BE ADDED HERE